டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இதுபோன்ற பிரச்சினைகள் எல்லாம் நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பகுதிகளில்தான் இருக்கின்றன. ஆகவே, மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் இதுபோன்று ஒரே இடத்தில் இருக்கின்ற ஒன்றுக்கு மேற்பட்ட வாக்குச்சாவடிகளைப் பிரிக்கும் எண்ணம் அரசின் தீவிர நடவடிக்கையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் முதலிலே குறிப்பிட்டேன். நூற்றுக்கு நூறு எல்லா வாக்குச் சாவடிகளையும் பொறுத்து ஒரு அறிக்கை சமர்ப்பிக்குமாறு தேர்தல் ஆணையம் கேட்டு இருக்கிறது. ஆகவேதான் எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இப்பொழுது இருக்கிற வாக்குச் சாவடிகளின் அமைப்பு முறை சரியாக இருக்கிறதா இல்லையா; அதிலே ஏதாவது மாற்றம் ஏற்படுத்த வேண்டியது அவசியமா என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய பரிந்துரையின் அடிப்படையில் வருகின்ற அறிக்கையை வைத்து தேர்தல் ஆணையத்தின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்படும். அந்த முறையில்தான் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 102. திரு. இரா. அப்புநடேசன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்

102--

குலசேகரத்தில் சார்பதிவாளர் அலுவலகம் அமைத்தல்

*19472-**திரு. இரா. அப்பு நடேசன்:**

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருவட்டார் தொகுதியில் குலசேகரத்தில் ஒரு சார் பதிவாளர் அலுவலகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை

(ஆ) எழவில்லை.

1993 டிசம்பர் 31]

திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'இல்லை' என்று சொல்லிவிட்டார்கள். ஆனாலும் அங்கேயுள்ள பொதுமக்களின் முக்கியத் தேவை அது. ஏனென்றால், மலையோரமாக இருக்கிறது. மலைப்பிரதேசம் நிறைந்த இடம். பேச்சிப்பாறை, சுருளகேரி, பால்மோர், திப்பரப்பு, குலசேகரம் போன்ற பஞ்சாயத்துக்களிலே உள்ள அனைத்து மக்களும் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வரவேண்டும் என்றால் திருவட்டாறுக்குத்தான் செல்ல வேண்டும். ஆகையால் கருணைகூர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குலசேகரத்திலே ஒரு சார்பதிவாளர் அலுவலகம் அமைத்துதர முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி.சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவட்டாறு பஞ்சாயத்தில்தான் குலசேகரம் இருக்கிறது. இப்போது இருக்கிற அலுவலகத்தில் 2600 பத்திரங்கள்தான் பதிவு ஆகின்றன. தனியாக ஒரு பதிவாளர் அலுவலகம் அமைக்க வேண்டும் என்றால் அங்கே 2000 பதிவுகள் தேவைப்படுகின்றன. இன்னொரு இடத்தில் இருப்பதை வேண்டுமென்றால் உங்களுக்கு மாற்றித்தரலாம். ஆனால் இப்போது திருவட்டாறிலேயே 2600 பதிவுகள்தான் என்பதாலே சங்கடமாக இருக்கிறது. திருவட்டாறிலிருந்து குலசேகரம் 5, 6 கி.மீ. தூரம்தான் இருக்கும் என்று நினைக்கிறேன். குலசேகரத்திலிருந்து வேர்க்கிளம்பி என்கிற ஊர் 3 கி.மீ. தூரம் என்று கேள்விப்படுகிறேன். வேர்க்கிளம்பியில் இப்போது சார்பதிவகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்த ஊரில் உள்ளதை வேண்டுமானால் மாற்றித்தர தனியாக உத்தரவு போடுவதற்கு அரசு ஆவன செய்யும்.

திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குலசேகரத்தில் இருந்து வேர்க்கிளம்பி 3 கி.மீட்டர் தூரத்தில் இருக்கிறது என்று உரைத்தார்கள். உண்மையிலேயே அப்படி இல்லை. 12 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. கோதையாரிலிருந்து வேர்க்கிளம்பிக்கு வரவேண்டுமென்றால் 35 கி.மீ.. தூரம், பால்மோரிலிருந்து வரவேண்டும் என்றால் 40 கி.மீட்டர் தூரமும் உள்ளது. ஆகையால், குலசேகரத்தில் அமைப்பதாக இருந்தால் அது மிக வசதியாக இருக்கும். ஆகையால், வருகின்ற நிதியாண்டிலாவது அமைச்சர் அவர்கள் கருணைகூர்ந்து குலசேகரத்தில் ஒரு சார்பதிவாளர் அலுவலகம் அமைத்துத் தருவாரா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.10

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறபோது,

மக்களுடைய சங்கடங்களைத் தெரிவித்தார்கள். இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், இன்றைக்கு இருக்கிற நிலைமையில் திருவட்டாரில், நான் முதலிலே சொன்னபடி, 1200 பத்திரங்கள்தான் பதிவாகின்றன. அதை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்றால்கூட, 1200 அல்லது 1400 இப்படியிருந்தால் இரண்டாகப் பிரிக்க முடியாது. அப்படி இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்றால், இன்றைக்கு தமிழ்நாட்டில் இருக்கின்ற 584 சார்பதிவாளர் அலுவலகங்களில், பல இடங்களில் 2200, 2300, 2600, 3000 என்று இருக்கிறது. எல்லாவற்றையும் பிரிக்க வேண்டுமென்றால் இன்றைக்கு எத்தனை சார்பதிவாளர் அலுவலகங்கள் இருக்கின்றனவோ அதைப்போல் இரண்டு மடங்கு பிரிக்க வேண்டிய நிலைமை ஏற்படும். அப்படி இன்றைக்கு இருக்கிற நிலைமையில் அதைப் பிரிப்பதற்கு இயலாது என்றும், வேண்டுமென்றால் மக்களுடைய நலன் கருதி எதிர்காலத்தில் அதைப்பற்றி அரசு ஆய்வு செய்யும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 103. டாக்டர் அ. ஸ்ரீதரன்; மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

103--

அனைத்து அரசு மருத்துவமனையிலும் உயிர்காக்கும் மருந்து தட்டுப்பாட்டினை நீக்குதல்

*** 20057 டாக்டர் அ. ஸ்ரீதரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

EFCORLIN (HYDRO CORTISONE HEMI SUCCINATE) என்ற உயிர்காக்கும் மருந்து அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் போதிய அளவு தட்டுப்பாடின்றி கிடைக்கச் செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஹைடிரோகார்டிசோன் ஊசி மருந்து மருத்துவமனைகளில் கிடைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத்திலுள்ள எந்த நோய்க்கும் ஹைடிரோகார்டிசோன் ஹெமிசக்கினேட் என்று சொல்லக்கூடிய உயிர் காக்கும் மருந்து, ஒரு சின்ன மருத்துவமனையிலிருந்து, கிளினிக் முதற்கொண்டு, பெரிய மருத்துவமனை வரையிலும், இந்த மருந்து இருந்தாக வேண்டும். இது